# தாய் வீடு

சாங்கி விமான நிலையத்தில் ஆஸ்திரேலியாவிலிருந்து வந்த சிங்கப்பூர் விமானம் தரை இறங்கியது. பணிப்பெண்கள் ஒப்பனை களையாத முகத்துடன் பாதுகாப்பான பயணத்திலிருந்து பயணிகளை வழியனுப்பவும் உதவிகள் செய்யவும் தயாராக நின்று கொண்டிருந்தார்கள். விமான நிலையம் விதவிதமான ஆடையுடன் உலா வரும் அழகான பெண்ணைப் போல நேர்த்தியமைக்கப்பட்ட மாற்றங்களுடன் அழகான அமைப்புகளுடன் வடிவமைப்பு துறையில் நாட்டம் உள்ளவர்கள் மட்டும் அள்ளிப் பருக விருந்தளித்துக் கொண்டிருந்தது.

பயணிகள் அனைவரும் கட்டாயமாக வெளியேற வேண்டியவர்கள் என்பதை மறந்த பலர் போட்டியில் கலந்து கொண்டு வெற்றிக் கோப்பையைத் தட்டிச் செல்லப் போகிறவர்கள் போல தங்கள்

கைப்பைகளால் மற்றவர்களை இடித்துத் தள்ளியபடி முந்தியடித்துக் கொண்டு சோதனைச் சாவடியை நோக்கி விரைந்தனர்.

எல்லோரும் செல்லட்டும் என்பதைப் போல அமர்ந்திருந்த இளைஞர்களில் சிலர் தங்கள் கைத்தொலைபேசியை முடக்கி விட்டனர். இன்றைய இளைஞர்களின் உலகமே தங்கள் சட்டைப் பைகளில் தான் என இருந்து விட்டால் உறவு, உறக்கம், உணவு இவை எல்லாம் இரண்டாம் பட்சமாகி விடுகிறது.

விமானத்திலிருந்து இறுதியாக இறங்கிய பணிப்பெண்கள் தங்கள் உடைமைகளுடன் சோதனைகளை முடித்து வெளியே வந்தனர். அவர்களில் ஒருத்தி தான் சந்தியா. தன் கைத்தொலைபேசியில் அவளே ஆச்சரியப்படும் அளவிற்கு வந்திருந்த குறுந்தகவல்களை ஒவ்வொன்றாக திறந்து பார்த்தபடியே வாடகை உந்து வண்டிக்காக வரிசையில் நின்றாள். வந்திருந்த அனைத்து குறுந்தகவல்களும் காப்பகத் தலைவியிடமிருந்தே வந்திருந்தன.

''காலம் தாழ்த்தாமல் காப்பகம் வரவும்'' காத்திருக்கிறோம் - ஜெயந்தி ராமன். தலையும் இல்லாமல் வாலும் இல்லாமல் வந்த செய்தியில்

முக்கியத்துவம் என்னவாக இருக்கும்? எண்ண ஓட்டத்திற்கு வேலை கொடுக்க ஆரம்பித்தாள். வாகனத்தின் வேகத்தோடு எண்ண ஓட்டமும் ஓடியது. சந்தியாவைப் பொறுத்தவரை காப்பகம் என்பது கோவிலுக்குச் சமமானது. வேலை உடையோடு அப்படியே செல்ல மனது இடங்கொடுக்கவில்லை. வீட்டிற்கு சென்று குளியலைப் போட்டு விட்டு உடை மாற்றிச் செல்லலாம். வாடகை உந்து வண்டிக்குரிய பணத்தைக் கொடுத்து விட்டு பெட்டியுடன் வீட்டை நோக்கி நடந்தாள்.

வீட்டில் சந்திராம்மா இல்லை. வீடு அலங்கோலமாக போட்டது போட்டபடி அப்படியே கிடந்தன. சுத்தத்தின் மறுபெயரே சந்திராம்மாள் என்று சந்தியா கூறுவது வழக்கம். ஆனால் இன்று வழக்கத்திற்கு மாறாக வீடு ஈரத்துணியின் வீச்சமும் கெட்டுப் போன குழம்பின் நாற்றமும் காலில் படியும் தூசியும் பார்ப்பதற்கே வயிற்றை குமட்டிக் கொண்டு வந்தது. இதையெல்லாம் சரி செய்வதென்றால் நேரத்திற்கு காப்பகம் போக முடியாது.

ஒரு வேளை சந்திராம்மாவுக்கு உடம்புக்கு சரியில்லாததால் தான் ஜெயந்தி ராமன் அழைத்து இருப்பாரோ...? அவளுக்கு அப்போது

எதுவுமே பிடிபடவில்லை. ஆனாலும் அவசர அவசரமாக குளியலைப் போட்டு விட்டு சாதாரண ஒப்பனையுடன் வெளியே வந்த போது எதிரே வந்த பக்கத்து வீட்டுக்காரர் ஹலோ... சொன்னார்.

பதிலுக்கு சந்தியாவும் ஹலோ... சொல்லி விட்டு மின்தூக்கியை அழுத்தினாள்.

சந்திராம்மாள் மூச்சுத்திணறலில் தீவிர சிகிச்சைப் பிரிவில் சேர்க்கப்பட்டு பலனளிக்காமல் இறந்த செய்தியை பக்கத்து வீட்டுக்காரர் கூறியதும் சந்தியாவின் இதயமே சுக்கு நூறாக நொறுங்கி விட்டது.

நீங்கள் சொல்வதெல்லாம் உண்மையா? என்பதைப் போல கண்களில் நீர் ததும்ப அவரைப் பார்த்தாள். அவர் உண்மை தான் என்று உறுதிப்படக் கூறினார்.

மின்தூக்கியை விட்டு வெளியே வந்து அருகிலிருந்த கல் பெஞ்சில் கட்டுப்படுத்த முடியாத அளவிற்கு ஆத்திரம் அழுகையாக மாற தலையைக் கவிழ்த்தபடி அமர்ந்தாள்.

சந்தியா...! குரல் கேட்டு திரும்பினாள்.

காப்பக வாகனமோட்டி கதிரவன் அங்கே நின்று கொண்டிருந்தார்.

அண்ணா...! சந்திராம்மா... முடிக்க முடியாமல் திணறினாள்.

ஆமாம்மா... அவங்களோட இறுதி மூச்சு வரை அவங்க உன் பெயரைத் தான் சொல்லிக்கிட்டே இருந்தாங்க. அந்த சமயத்தில் தான் ஜெயந்தி மேடம் உன்னோட தொடர்பு கொள்ள முயன்றாங்க. ஆனா முடியலை. அதன் பிறகு தான் நேற்று இரவு அவுங்க உறவுக்காரங்க எல்லாருமா சேர்ந்து இறுதிச் சடங்கை நடத்தினாங்க. சரி... வா! காப்பகத்துக்கு போய் பேசிக்கலாம் என்றபடி வாகனத்தை நோக்கி நடந்தார்.

சந்தியா கட்டிய உறவுக் கோட்டை சுக்கு நூறாக உடைந்தது. பிறப்பு என்ற ஒன்று இருக்கும் போது இறப்பு என்பது கட்டாயம் என்பதை மனது ஏற்க மறுத்தது. திக்கு தெரியாத காட்டில் திசை மாறிய பறவைகளாய் சுற்றித் திரிந்து விட்டு களைத்து போய் சாய இடமில்லாமல் தவித்தாள். தன் வாழ்க்கையின் சந்தோசத்தை ஒட்டுமொத்தமாக எங்கிருந்தோ வந்த சுனாமிப் பேரலை இழுத்துச் சென்றதைப் போன்ற ஓர் உணர்வு அவளுக்குள் ஏற்பட்டது. என்

வாழ்க்கைப் பயணத்தில் துடுப்பில்லாத படகில் எப்படி பயணிக்கப் போகின்றேன் என்ற கேள்விக் கணைகள் அவளைத் துளைத்தெடுத்தன. சந்தியா காப்பகத்திற்குச் செல்லும் வாகனத்தில் ஏறி அமர்ந்ததில் இருந்து பேசா மடந்தையாகவே இருந்தாள். அவள் கண்களில் வழிந்த நீர் கன்னத்தை தடவி கழுத்தை நனைத்தது. கதிரவனால் அவளுக்கு ஆறுதல் சொல்ல முடியாவிட்டாலும் அழுதால் மனதில் உள்ள பாரம் குறையும் என்பதால் அவர் சாலையை பார்த்தபடி வாகனத்தை ஓட்டினார்.

அவளுடைய கடந்த காலம் கடலில் முத்தெடுக்க போய் காணாமல் போனது மாதிரிதான். வாழ்க்கை என்ற புத்தகத்தில் பிறப்பு என்ற அத்தியாயம் நிரப்பப்படாத பக்கங்களாகவே இருப்பதால் தான் அடுத்தடுத்த அத்தியாயங்களை திருப்பிப் பார்க்கவே தயக்கமாக இருக்கின்றது.

உலகத்தில் மிக உயர்ந்த உறவாக நாம் கருதுவது தாய் என்ற உறவைத்தான். அன்பு என்ற கோட்டையின் அஸ்திவாரம் அன்னை. அந்த உறவை அவளின் பெற்றோர் கொடுக்க மறுத்து காப்பகத்தில்

விட்டுச் சென்ற போது தாயின் மடியையும் தந்தையின் அரவணைப்பையும் கொடுத்தது சந்திராம்மாள் தான்.

ஆறு வயது வரை காப்பக வாழ்க்கை கற்றுத் தந்த பாடம் ஏராளம். பகுதி நேரமாக காப்பக சேவைக்கு வரும் சந்திராம்மாள் முழுக்க முழுக்க சந்தியாவை கவனித்து வந்தாள். சந்தியா புத்தகங்களை விட மனிதர்களைத் தான் அதிகம் படித்திருக்கிறாள். காப்பகத்தில் உள்ள மரம், செடி, கொடி, சுவர், கட்டிடம் இவையெல்லாம் தான் அவளின் உறவுகள்.

நாட்கள் செல்லச் செல்ல சந்திராம்மாளுக்கும் சந்தியாவைப் பிரிந்து இருக்க முடியவில்லை. முழுநேரமாக வீட்டில் வைத்து அவளை வளர்க்கும் பொறுப்பை தன்னிடம் ஒப்படைக்குமாறு காப்பகத்திடம் கோரினாள். அறுபது வயதில் ஆறு வயது குழந்தையான சந்தியாவை பார்த்துக் கொள்ளும் பொறுப்பை காப்பகம் அவளிடம் வழங்கியது.

பாசம் நம்மை பந்தாடும் போது பகுத்தறிவு கூட நமக்கு பகையாளியாகி விடுகிறது என்பதை சந்திராம்மாள் விரைவில் புரிந்து கொண்டாள். உறவுக்காரர்கள் பேசிய கேலிப் பேச்சுக்களை எல்லாம்

அவள் கண்டு கொள்ளாமல் தனது ஓர் அறை வாடகை வீட்டிற்கு சந்தியாவை அழைத்து வந்தாள்.

வீட்டின் வாசத்தை முதன்முதலில் சந்தியா நுகர்ந்த போது அவள் அடைந்த சந்தோசத்திற்கு அளவே இல்லை. சந்திராம்மாளின் அனுபவம் அவளை அடக்கமும் அறிவும் உடையவளாக வளரச் செய்தது. சந்தியாவிற்கான செலவுகளை காப்பகமே ஏற்றது. முறையான வளர்ப்பும் சரியான வழிகாட்டலும் சந்தியாவை விமானப் பணிப்பெண்ணாக்கியது.

எட்டிப் பிடிக்க முடியாத வாழ்க்கையை எதார்த்த வாழ்க்கையாக்கலாம் என்பதை நடைமுறைப்படுத்தி வாழ்க்கையையும் சொல்லிக் கொடுத்து, வாழவும் கற்றுக் கொடுத்தாள் சந்திராம்மாள். மற்றவர்களுக்கு வெளிச்சத்தை தந்து தன்னையே உருக்கும் மெழுகினைப் போல சந்திராம்மாள் வாழ்ந்த வாழ்க்கையிலும் ஓர் அர்த்தம் இருந்தது.

காப்பகத்திற்குள் வாகனம் நுழையவும் சந்தியாவிற்கு தன் தாய் வீட்டிற்குள் நுழைந்த ஓர் உணர்வு. துக்கம் தொண்டையை

அடைத்தது. ஜெயந்தி ராமனின் அணைப்பில் வாய்விட்டு அழுதாள். தன் வாழ்நாளில் முதன்முறையாக அவளுக்காக அல்லாமல் சந்திராம்மாளுக்காக மனம் விட்டு அழுதாள்.

ஜெயந்தி ராமனின் ஆறுதலான வார்த்தைகள், அன்பான அரவணைப்பு அவளை சற்றே நிதானமடையச் செய்தது.

சந்தியா... உன்னோடு தொடர்பு கொள்ள முயற்சி செய்தேன். ஆனால்... முடிக்கும் முன்பே, பொய் சொல்ல வேண்டாம் மேடம். அவுங்க உறவுக்காரங்க நான் வரக்கூடாதுன்னு சொல்லியிருப்பாங்க. அதனால் தான் காரியங்களை இவ்வளவு விரைவாக செய்தீங்கன்னு தெரியும். என் காதுக்கு விழாம பேசுற எதையும் நான் கண்டுக்குறதில்லை மேடம்.

ஒழுக்கமில்லாத பெண் வயிற்றுல பிறந்தது என் குற்றம்னா உத்தமி வளர்ப்புல வளர்ந்தது என் பாக்கியம் மேடம்.

அதை யாரும் மறுக்கலை. உன்னோட ஆரோக்கியமான வாழ்வுக்கு பழைய சம்பவங்களை நினைவுபடுத்திக் கொள்வது அந்தளவிற்கு நன்றாக இருக்காதுங்கிறது என்னோட கருத்து.

மேடம்...! என்னோட பிறப்பு ரகசியமா இருக்கும் பட்சத்தில் நீங்கள் கூறுவதை ஏற்றுக் கொள்ளலாம். ஆனால் என்னோட பிறப்பு பத்திரிக்கையில் பிரசுரிக்கப்படாமலேயே பிரபலமானதால் நான் அடைந்த மன வலியை எப்படி என்னால் மறக்க முடியும். சில சம்பவங்கள் மண்ணோடு மண்ணாக மக்கும் வரை நம்மால் அதை மறக்கவோ மன்னிக்கவோ முடியாது.

சந்தியா...! மனிதர்கள் மாறக்கூடியவர்கள். எல்லாக்கால கட்டத்திலும் ஒரே மாதிரியான எண்ணத்துடன் மனுஷங்க இருப்பாங்கன்னு சொல்ல முடியாது.

காலங்கடந்து நடக்கிற மாற்றங்கள் எதுவும் வாழ்க்கைக்கு உதவாது மேடம். பருவக்கோளாறில் பள்ளிப் படிப்பை பாதியில விட்டு விட்டு, வாலிப வயது வம்புக்கு இழுக்க, காதல் தந்த போதையில் கன்னித் தன்மையை இழந்து, குழந்தைகளையும் பெற்று விட்டு அதனை வளர்க்க திறனற்று காப்பகத்தில் அவர்களை அநாதையாக விட்டுட்டு அதன் பிறகும் விதவிதமான காதலர்களுடன் வீதி உலா வந்தவங்க

கண்கெட்ட பிறகு சூரிய நமஸ்காரம் செய்யறதால யாருக்கு என்ன லாபம்?

லாபத்தை எதிர்பார்த்து மனிதர்களிடம் பழக முடியுமா சந்தியா? எதிர்பார்ப்பு இல்லாமல் வாழும் வாழ்க்கையில தான் இன்பம் அதிகம்னு காப்பகம் சொல்லித் தந்ததை உனக்கு நினைவுபடுத்த விரும்புகிறேன் சந்தியா.

நானும் எதையும் மறக்கல மேடம். என்னோட சின்ன சின்ன எதிர்பார்ப்புல இன்னும் ரணங்கள் மட்டுந்தான் மிச்சமிருக்கு. ஐந்து வயதில அம்மாங்கிற உறவை கண்டு ஆனந்தப்பட்டேன். அதே உறவு சாப்பாடு இல்லாம அறையில அடைச்சி வச்சப்ப அழுதேன். பத்து வயசுல பாட்டி இறந்தப்ப மது குடிக்க என்னை கட்டாயப்படுத்தினாங்க. அப்ப நான் வேதனைப்பட்டேன். என் அம்மா அவருடைய காதலனைக் காட்டி இவரை தற்போது மாமான்னு கூப்பிடு. இரண்டு வருடம் கழித்து அப்பான்னு கூப்பிடலாம்னு சொன்னப்ப அர்த்தம் புரியல. ஆனாலும் அசிங்கப்பட்டேன். உயர்நிலைப்பள்ளில இருந்த போது கணவன் என்ற புதுகதையைக்

கூறினார். அப்படி என்னைப் பெற்றெடுத்தவள் கூறியதை என்னால் இந்த நிமிடம் வரை ஜீரணிக்கவே முடியவில்லை. அன்று வெறுத்தேன் என் பிறப்பை.

ஆனா சந்திராம்மா இல்லாட்டா என்னோட நிலை... அய்யோ... யோசிக்கவே பயமாயிருக்கு.

ஐந்தறிவு படைத்த விலங்குகள் கூட குட்டிகளை ஈன்றவுடன் அவற்றை அப்படியே விட்டுச் செல்வதில்லை. அந்தக் குட்டிகள் தாமாகவே இரை தேடும் வரையிலோ அல்லது வேட்டையாடும் வரையிலோ அவற்றைத் தன் கண்காணிப்பிலேயே வளர்த்து வருகிறது. ஆறறிவு படைத்த மனிதனுக்கு ஏன் இந்த உண்மை விளங்கவில்லை.

சந்தியா...! ஒரு சிலர் செய்யிற தவறுகளுக்காக எல்லாரையும் விமர்சனம் செய்றதுல எனக்கு உடன்பாடு கிடையாது. வாழும் சூழலும் வளர்ப்பு முறையும் ஒரே சமயத்துல ஒரே தண்டவாளத்துல பயணிக்கும் போது தவறி விழுவது சகஜம் தானே. விழுந்த இடத்தில்

சுகம் காண்பதும் உடனே எழுந்து நிற்பதும் அவரவர் மனத்தைப் பொறுத்தது.

அப்படின்னா அவுங்க எப்போ எழுந்து வர்றாங்களோ அது வரைக்கும் நாங்க காத்திருக்கணும். அப்படித்தானே. முற்றுப்புள்ளி வைக்கப்பட்ட ஒன்றுக்கு காப்பகம் முன்னுரை எழுதுறதால பாதிக்கப்படுறது பிள்ளைங்க தானே.

சந்தியா...! நீ என்ன சொல்ல வர்றேனு எனக்கு புரியுது. இப்போதெல்லாம் நம்ம காப்பகத்துல பிள்ளைகளின் பிறப்பு ரகசியமாக்கப்பட்டுள்ளன. பெற்றோர்களால் பிள்ளைகளுக்கு தொந்தரவு ஏற்படுவது குறைந்து விட்டது. நீ சந்திராம்மாகிட்ட பகிர்ந்து கொண்ட சில நிகழ்வுகளுக்குப் பின் இந்த திட்டத்தை நாம் நடைமுறைப்படுத்துகிறோம். இந்த விசயத்துல உனக்கு சந்தோசம் தானே.

சந்தோசம் தான். ஆனா அதே நேரத்துல காப்பகத்திலிருந்து வெளியாகிற பிள்ளைகள் ஒருவருடைய கண்காணிப்பிலேயே வளர்ந்தால் நன்றாக இருக்கும். அதை விட்டு விட்டு இரண்டு மூன்று

வீடுகளை மாற்றிக் கொண்டிருந்தால் அவர்களின் பழக்கவழக்கம், உறவு முறைகள், வாழ்க்கை பாதை என எல்லாமே மாறும் போது அவர்கள் எதை பின்பற்றுவது என்று தெரியாமல் திணறி தவறான பாதையைத் தேர்ந்தெடுக்கலாம்.

இந்த விசயத்துல காப்பகம் மிகவும் கவனமாகத்தான் இருக்கிறது. ஒரு சிலரை கட்டுப்படுத்த முடியாத போது மட்டுமே மாற்றம் தேவைப்படுகிறது. அந்த மாற்றம் அவர்களை பாதிக்கும் பட்சத்தில் அதற்கு காப்பகமே பொறுப்பேற்கும்.

சரி... சந்தியா... ஓய்வு எடுக்காமல் ஓடி வந்திருப்பீங்க. நீங்க வீட்டுக்கு போய்ட்டு பிறகு வாங்களேன் என்றபடி எழுந்தாள் ஜெயந்தி ராமன்.

சந்தியாவும் விடைபெற்று அங்கிருந்து கிளம்பிய போது மீண்டும் அழைத்தார் ஜெயந்தி ராமன். என்ன என்பதை போல அவள் திரும்பிய போது, உங்களுடைய நன்கொடைக்கு காப்பகம் என்றும் நன்றியுடன் இருக்கும்.

மேடம்... அப்படி பார்த்தா என்னுடைய வாயில பேச்சுக்கு பதிலா வெறும் நன்றியா தான் வந்துட்டு இருக்கும். பெற்றவர்களுக்கு பிள்ளைகள் செய்யிற உதவிக்கெல்லாம் நன்றி கூறுவது அர்த்தமற்றது. ஒரு மகளா என் தாய் வீடாகிய காப்பகத்திற்கு என்னால் முடிந்ததை என் கடைசி மூச்சு இருக்கும் வரை கட்டாயம் செய்வேன்.

வர்றேன் மேடம் என்று சொல்லி விட்டு சிரித்தபடியே அவள் வெளியேறினாலும் அவளுடைய மனது சந்திராம்மாவுக்காக அழுது கொண்டு தான் இருந்தது.

காலம் தன் கடமையில் செவ்வனே இருந்தது. உறவின் வலி அதன் பிரிவில் தான் தெரியும் என்பார்கள். அதனை சந்தியா முழுமையாக உணர்ந்தாள். சந்தியாவுக்கு தற்போதைய தனிமையான வாழ்க்கை மிகவும் கொடுமையாக இருந்தது.

வெளியுலகிற்கும் காப்பகத்திற்கும் உள்ள வேறுபாட்டை தரம் பிரித்து பார்க்கத் தெரியாத ஆறு வயது சந்தியாவின் வாழ்க்கை அன்று இன்பமாக கழிந்தது. பிறகு சந்திராம்மாவுடன் கிட்டத்தட்ட பதினேழு

வருடங்கள் வாழ்ந்த பிறகு இன்று அவரின் பிரிவு அவளை மிகவும் வாட்டுகிறது.

மன அமைதிக்காக வேலையில்லா நாட்களில் எல்லாம் காப்பகம் சென்றாள். அங்குள்ளவர்களுக்கு தன்னாலான உதவிகளைச் சேவையாக செய்து வரலானாள். அந்தச் சமயங்களில் எல்லாம் காப்பகம் அவளுக்கு அமைதியை அளவில்லாமல் அளித்தது. அந்த அமைதியை எண்ணியபடியே அவள் தன் வாழ்நாளைக் கழித்தாள். அதனால் அவளுக்கு வாழ்க்கை அமுதமாக இருந்தது.

முற்றும்...

சொற்கள் 1338